முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

EA No.04/2025 In EP No.12/2021 In OS No.39/2005

**மனுதாரர் தரப்பு சாட்சி-2 செல்வராஜ் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>

1) 1ம் மனுதாரர் எனது அண்ணன் என்றால் சரிதான். நானும், எனது அண்ணனும் ஒரே குடும்பமாக சின்னரெட்டிப்பட்டியில் வசிக்கிறோம் என்றால் சரிதான். மனு சொத்து சின்னரெட்டிப்பட்டியில் உள்ளது. யார் கிரையம் வாங்கியது என்றால் நானும், எனது அண்ணனும் சேர்ந்து கிரையம் வாங்கினோம். சர்வே எண் 412/8 ல் 15 செண்ட் கிரையம் வாங்கினோம். சர்வே எண் 412/8 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால், தெரியும். வீரப்பன் ஆசாரி, முருகன் ஆசாரி இருவரும் நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு மேற்கு திசையில் இருக்கிறார்களா என்றால், மேற்கிலும், கிழக்கிலும் இருக்கிறார்கள். வீரப்பன் ஆசாரி, முருகன் ஆசாரி இருவரும் 1ம் எதிர்மனுதாரர் அகிலாண்டத்திற்கு என்ன உறவு என்றால், அப்பா மற்றும் சித்தப்பா ஆகும்.

2) அகிலாண்டம் தனது தகப்பனார் சொத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்தின் கிழக்கிலும், மேற்கிலும் உள்ள நிலங்களின் சர்வே எண் 412/8 என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு தனியாக உட்பிரிவு செய்துள்ளேனா என்றால் இல்லை, பட்டாவும் எங்கள் பெயரில் இல்லை. நான் கிரையம் வாங்கிய சொத்து எந்த இடத்தில் உள்ளது என சரியாக கூற இயலாது என்றால் சரியல்ல. எங்கள் இடத்தை குறிப்பாக காட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் இருக்கிறது. அகிலாண்டத்திற்கு சுவாதீனம் கொடுத்த இடம் நடுவில் உள்ளது என்றால் சரிதான். அது எனக்கு பாத்தியமில்லை என்றால் சரியல்ல. அகிலாண்டத்திற்கு

சுவாதீனம் கொடுத்த போது நானும் அருகில் இருந்தேன் என்றால் சரிதான். நில அளவையர் மூலமாக அளவீடு செய்து சுவாதீனம் கொடுத்தார்களா என்றால் ஆமாம்.

3) வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்துதான் சுவாதீனம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். சர்வே எண் 412/8 நிலத்தைத் தவிர வேறு சொத்து உள்ளதா என்றால் உள்ளது, அதன் சர்வே எண் ஞாபகமில்லை. சர்வே எண் 412/8 ல் நான் கிரையம் பெற்ற சொத்திற்கும், நான் தாக்கல் செய்த மனு சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரை அலைகழித்து, அவரிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கிரைய ஆவணத்தில் உள்ள சொத்திற்கும், 1ம் எதிர்மனுதாரர்களுக்கு சுவாதீனம் கொடுத்த சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**